இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2021/2022
மட்டம் 4
இறுதிப் பரீட்சை
குடும்பச் சட்டம்-**LLU4707**
காலம்: மூன்று (03) மணித்தியாலம்

திகதி: 21.01.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

**வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08).**
**ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

உம்மால் தெரிவுசெய்யப்பட்ட வினாக்களிற்கான விடைகளை தீர்க்கப்பட்ட வழக்குகள், நியதிச்சட்ட உறுப்புரைகள் என்பனவற்றுடன் ஆராயவேண்டியது அவசியமானது என்பதை கருத்திற் கொள்ளவும்

1. பின்வரும் சந்தர்ப்பங்களின் சட்ட நிலைகளை ஆராய்க.

    i. சியதுரிஸ் என்பவர் நிமல் மற்றும் கமல் ஆகிய இரு பிள்ளைகளதும் தந்தை ஆவார். இவர் தனது இறுதி நாட்களில் தன்னை கவனித்துக்கொண்ட உறவினர் ஒருவரது மகளான சுபிபி என்பவளுக்கு தன்னுடைய சொத்துக்களை இறுதி விருப்பாவணத்தின் வாயிலாக விட்டு 2022 இல் இறந்தார்.இதனால் மனவேதனையுற்ற நிமலும் கமலும் சியதுரிஸின் சொத்துக்கள் அவரின் சட்டபூர்வ பிள்ளைகளான அவர்களையே சார வேண்டும் எனக் கூறினர்.


    ii. ராசபுத்திரா மற்றும் சரஸ்வதி ஆகிய இருவரும் கணவனும் மனைவியும் ஆவர். அவர்களது ஒரே மகள் மீனா ஆவாள். திருமணத்தின் பின்னர் அவர்கள் நுவரெலியாவில் 30 ஏக்கர்களில் தேயிலை தோட்டம் ஒன்றை வாங்கினர். வெற்றிகரமாக தேயிலை பயிர்ச்செய்கை ஒன்றை பேணிய இவர்களால் அருகாமையில் 10 ஏக்கர்களில் இன்னுமொரு தேயிலைத் தோட்டத்தையும் வாங்க முடிந்தது. திடீர் இதய செயலிழப்பு காரணமாக ராசபுத்திரா இறந்தார். அவசர பொருளாதார தேவை ஒன்றிற்காக குறித்த தேயிலைக் காணியின் ஒரு பகுதியை சரஸ்வதி விற்பதற்கு திட்டமிடுகிறாள். குறித்த காணியில் சரஸ்வதியின் சொத்துவம்.

    iii. பிசோ மெனிக்கே எனும் கண்டியப் பெண் ஒருவர் பண்டார எனும் இன்னொரு கண்டியனை 2008 இல் திருமணம் செய்தாள்.இவர்களது திருமணம் தீக திருமணம் ஒன்றாக கண்டியச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.திருமணத்தின் பின்னர் பிசோ மெனிக்கே பண்டாரவின் வீட்டிற்கு சென்றதுடன். அவர்களது திருமண வாழ்வை ஆரம்பித்தனர். அண்மையில். பண்டார தன்னுடைய மனைவியான பிசோ மெனிக்கேவை அவளது பெற்றோரின் வீட்டிற்கு செல்லுமாறும் அவ்வாறு அவள் செய்தால் அவளது தந்தையின் ஆதனத்தில் இருந்து உரிமைகளை கோர முடியும் என்றும் கோருகிறான்.

    iv. மஜிட் மற்றும் சுபிபா ஆகிய இருவரும் திருமணமான ஒரு முஸ்லிம் தம்பதியினர் ஆவர். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லாத காரணத்தால், கௌடின் எனும் ஒரு ஆண் பிள்ளையை அவர்கள் மகவேற்றனர். மஜிட் மற்றும் சுபிபா இருவரும் 2016 இல் ஒரு புகையிரத விபத்தில் இறந்தனர். கௌடின் தன்னை மகவேற்ற பெற்றோர்களின் ஆதனத்திற்கு உரிமை கோருகிறான்.

**(5x4=20 புள்ளிகள்)**

2. கீழே தரப்பட்டுள்ள வரைபடத்துடன் தொடர்புறுத்தி இலங்கையின் சட்ட முறைமையில் திருமணம்சார் நிவாரணம் தொர்பான சட்ட நிலைகளை விளக்குக.




(20 புள்ளிகள்)

3.

i. 'பிள்ளை ஒன்றின் சட்டபூர்வ தன்மை தொடர்பில் பிணக்குகளை தீர்ப்பதற்கு சான்று கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112 ஆனது வழிகாட்டுகிறது.'

ii. 'பிள்ளை ஒன்றின் உண்மையான தந்தை எவர் என்பதை தீர்மானிக்கவும் , அப்பிள்ளையின் தந்தையென நிருபிப்பது தொடர்பிலான ஐயங்களை ஒழிக்கவும் மருத்துவ மற்றும் விஞ்ஞான சான்றுகளை DNA சான்று வழங்குகிறது'

இலங்கையின் பிள்ளையொன்றின் சட்டபூர்வ தன்மையை தீர்மானிப்பது தொடர்பில் மேலுள்ள இரு முறைகளினதும் பிரயோகத்தை நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

4. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்ட பிரகாஷ் என்பவன் 2010 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவானான். அதே பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவியாகக் கல்வி கற்ற பரமேஸ்வரி என்பவளுடன் அவன் காதல் வயப்பட்டான். பிரகாஸிம் பரமேஸ்வரியும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதனால், பரமேஸ்வரியின் பெற்றோர் அவர்களது உறவிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மட்டக்களப்பில் கணக்காளர் ஒருவராக பிரகாஸ் நியமனம் ஒன்றை பெற்றபோது, பரமேஸ்வரியும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் நியமனம் ஒன்றைப் பெற்றாள். இவர்கள் இருவரும் திருமணம் புரிய முடிவு செய்து 2017 இல் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரகாஸின் இல்லத்தில் தாலி சம்பிரதாயம் ஒன்றை மேற்கொண்டனர். திருமணத்தின் பின்னர் இருவரும் மட்டக்களப்பில் கணவன் மனைவியாக வாழ்ந்தனர்.இவர்களிற்கு 2019 இல் ஆண்பிள்ளை ஒன்று பிறந்தது. பிரகாஸ் மற்றும் பரமேஸ்வரி இருவருக்கும் இடையிலான திருமணம் பதிவு செய்யப்பட்டிராதமையினால், இருவரிற்கும் இடையிலான திருமணம் வலிதானது அல்ல என்று அண்மையில் பிரகாஸின் நண்பன் பிரகாஸிற்கு கூறினான்.

மேலுள்ள சந்தர்ப்பத்தை தொடர்புறுத்தி பின்வருவனவற்றின் சட்ட வலிதாந்தன்மையை ஆராய்க.

i. பரமேஸ்வரி தமது திருமணத்தின் சட்ட வலிதாந்தன்மையை அறிய விருப்புகிறாள்.
(10 புள்ளிகள்)

ii. சகல திறத்தவர்களும் கண்டியர்கள் எனின் உமது விடை வேறுபடுமா?
(05 புள்ளிகள்)

iii. இத்திருமணம் நிலைத்திருக்கும் போது, பிரகாஸ் இஸ்லாமிய மதத்திற்கு மதமாறியதுடன், 2020 இல் முபீஜா எனும் முஸ்லிம் பெண்ணை மணந்தான்.
(05 புள்ளிகள்)

5. சுராஜ் மற்றும் வஜுரா இருவரும் 2005 இல் திருமணம் புரிந்து , பொதுச் சட்டத்தின் கீழ் ஆளப்படுகின்றனர். சுராஜ் தனது வியாபாரத்தை விருத்திசெய்ய பல மணி நேரத்தை அர்ப்பணிக்கும் ஒரு வர்த்தகர் ஆவார். தாதி ஒருவரான வஜிராவும் அவளது கடமைகளுடன் ஓய்வின்றி பணியாற்றினாள். இவர்கள் இருவரிற்கும் 8 வயதில் ஒரு பெண் பிள்ளையும் , 6 வயதில் ஒரு ஆண் பிள்ளையும் காணப்படுகின்றனர்.

முதல் பிள்ளை பிறந்த பின்னர் காலியில் வசித்து வந்த சுராஜின் தாயும் தந்தையும் கொழும்பிற்கு வந்ததுடன்,அவர்கள் இரு பிள்ளைகளையும் கவனிக்க ஆரம்பித்தனர். பிள்ளைகளும் அவர்களுடன் நெருக்கமாக வளர ஆரம்பித்தனர். இளைய மகன் 5 வயதாகிய போது , சுராஜின் தாயும் தந்தையும் காலியில் இருந்த அவர்களது வீட்டிற்கு மீள்திரும்பினர். இதன் பின்னரும் பிள்ளைகள் தந்தையின் பெற்றோருடன் மிக நெருக்கமான உறவு ஒன்றைக்கொண்டிருந்ததுடன், அவர்களுடன் பிள்ளைகள் அடிக்கடி தொடர்புகொண்டு வந்தனர். பிள்ளைகள் தமது சகல பாடசாலை விடுமுறைகளையும் காலியில் தமது தந்தையின் பெற்றோருடன் கழித்தனர்.

சுராஜ் அடிக்கடி மதுவருந்தி வீட்டிற்கு வந்தான். அவன் வஜிரா இரவு நேர கடமைகளுக்கு செல்வதை விரும்பவில்லை. அண்மைக்காலமாக வஜிராவும் சுராஜும் சண்டையிட ஆரம்பித்ததுடன், சுராஜ் மதுபோதையில் அவளை தாக்கவும் ஆரம்பித்தான். ஒருநாள் சுராஜுடனான வாக்குவாதம் ஒன்றின் பின்னர் , வஜுரா வீட்டைவிட்டு நீங்கியதுடன் தெஹிவளையில் அவளது பெற்றோருடன் வாழச் சென்றாள். வஜுரா பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்கு சுராஜ் அனுமதிக்காததுடன், அவள் அவர்களை சந்திக்க அனுமதிக்கவும் மறுத்தான். சுராஜ் பிள்ளைகளை கவனித்துக்கொள்ள 70 வயதுடைய பெண் சேவகி ஒருவரை அழைத்து வந்தான். சுராஜ் அடிக்கடி வீட்டிற்கு மதுவருந்திய பின்னரே வருவதை வஜுரா அறிந்தாள்.

i. வஜுரா இரு பிள்ளைகளதும் கட்டுக்காவலை பெற விரும்புகிறாள் வஜுராவிற்கு அறிவுறுத்துக.
(10 புள்ளிகள்)

ii. இரு பிள்ளைகளதும் கட்டுக்காவலை சுராஜின் பெற்றோர் பெற விரும்புகின்றனர். இவர்களுக்கு அறிவுறுத்துக.
(10 புள்ளிகள்)

6. '1989 இல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் சிறுவர் உரிமைகள் சமவாயத்தினை ஏற்றுக்கொண்டமை சிறுவர்களது உரிமைகள் பரப்பின் மிகப்பெரும் வெற்றி ஆகும். சிறுவர் உரிமைகள் சமவாயம் பொதுவில் பிள்ளைகளின் வழங்கல் உரிமைகள், பாதுகாப்பு உரிமைகள் மற்றும் பங்கெடுத்தல் உரிமைகள் முதலானவை குறித்து நோக்குகிறது.'

மேலுள்ள கூற்றை உள்நாட்டிலும் வெளிநாட்டு நியாயாதிக்கங்களில் இருந்தும் சட்ட, நீதியியல் மற்றும் நிர்வாக அபிவிருத்திகளை எடுத்துக்காட்டி ஆராய்க. சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் இருந்து பொருத்தமான உறுப்புரைகளை நீர் குறிப்பிட வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

7. "ஒரு வலிதான மகவேற்பு ஆனது மகவேற்கப்பட்ட பிள்ளைக்கு சட்ட ரீதியான திருமணம் ஒன்றின் மூலம், மகவேற்றவரிற்கு பிறந்த பிள்ளை ஒன்றின் அந்தஸ்தை வழங்குவதுடன் கல்வி, பராமரிப்பு, எதிர்கால பாதுகாவல் முதலானவை தொடர்பில் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கான உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புடைமைகள் என்பவற்றை மகவேற்ற பெற்றோருக்கு அளித்தும் கைமாற்றியும் வழங்குகிறது."

பின்வரும் சந்தர்ப்பங்கள் குறித்து பிள்ளை ஒன்றை மகவேற்றல் தொடர்பில் சட்ட நிலையை ஆராய்க.

- இலங்கைக்குள் பிள்ளை ஒன்றை மகவேற்றல்
- <u>வெளிநாட்டு தம்பதி</u> ஒன்றால் இலங்கை பிள்ளை ஒன்று மகவேற்கப்படல்.

**(20 புள்ளிகள்)**

8. பின்வரும் தலைப்புகளின் மீது குறிப்புகளை எழுதுக.

i. கோள்வழித் திருமணம் (Putative marriage)
ii. பெற்றோர்களை பராமரிப்பதில் பிள்ளைகளின் கடப்பாடு
iii. முஸ்லிம் சட்டத்தின் கீழ் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது
iv. உரோமன் டச்சுச் சட்டத்தின் கீழ் வெறிதிற்கான அடிப்படைகள் (Grounds for Nullity under Roman Dutch Law)

**(5x4 =20 புள்ளிகள்)**

*பதிப்புரிமை பெற்றது*